ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2425/73 - 2025 මාර්තු මස 02 වැනි ඉරිදා - 2025.03.02
*2425/73 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

*27ஊ, 28(2), 28(2)(அ), 28(2)(ஆ) மற்றும் 29(1)(அ)(i) மற்றும் (ii) பிரிவுகளின் கீழான அறிவித்தல்*

இதனகத்துள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிருவாக மாவட்டத்தினுள் அமையப்பெற்றுள்ள மற்றும் அந்த அட்டவணையின் 2 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் அட்டவணையின் 3 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கைக்கான முதலாவது பெயர்குறித்த நியமனப் பத்திரத்தினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த அட்டவணையின் 4 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; மேலதிக பெயர்குறித்த நியமனப் பத்திரத்தினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த அட்டவணையின் 5 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; உள்ளூர் அதிகார சபைக்காக பெயர் குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, அந்த அட்டவணையில் 10 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; முதலாவது பெயர்குறித்த நியமனப்பத்திரத்தினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த அட்டவணையின் 6 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; மேலதிக பெயர்குறித்த நியமனப்பத்திரத்தினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த அட்டவணையின் 7 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; முதலாவது பெயர்குறித்த

1A - G 43959 — 29 (2025/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நியமனப்பத்திரம், இரண்டாவது (மேலதிக) பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஆகிய இரண்டு பெயர்குறித்த நியமனப்பத்திரங்களிலும் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கை (25%), அந்த அட்டவணையின் 8 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; உள்ளூர் அதிகார சபையில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 25%, அந்த அட்டவணையின் 9 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; அந்த உள்ளூர் அதிகார சபைக்காக பெயர்குறித்த நியமனப்பத்திரங்களைக் கையளிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் வேட்பாளர்களினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய வைப்புப் பணத்தொகைகள், அந்த அட்டவணையின் 11 ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகுமெனவும்; பொது மக்களின் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சி. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. ஷண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2025, மாச்சு 02.

**அட்டவணை**

**ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைகளுக்குமான உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்புப் பணத்தொகை**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிருவாக மாவட்டம் | உள்ளூர் அதிகார சபை | வட்டாரங்களின் எண்ணிக்கை | முதலாம் பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் குறிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை | இரண்டாம் (மேலதிக) நியமனப்பத்திரத்தில் வேட்பாளர்களின் எண்ணிக்கை | முதலாம் பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் பெயர் குறிக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை | இரண்டாம் (மேலதிக) பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் பெயர் குறிக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை | முதலாவது நியமனப்பத்திரம் மற்றும் மேலதிக நியமனப் பத்திரம் ஆகிய இரண்டிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைகளுக்கும் இருக்க வேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை (25%) | பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் இருக்க வேண்டிய வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை | வைப்புச் செய்யப்பட வேண்டிய வைப்புப் பணம் (ஒரு வேட்பாளர் சார்பாக) | |
| | | | | | | | | | | அரசியற் கட்சி (ரூ.1500.00) | சுயேச்சைக் குழு (ரூ.5000.00) |
| கிளிநொச்சி | பூநகரி பிரதேச சபை | 11 | 11 | 10 | 1 | 5 | 5 | 4 | 21 | 31,500.00 | 105,000.00 |
| மன்னார் | மன்னார் பிரதேச சபை | 11 | 12 | 11 | 2 | 5 | 5 | 5 | 23 | 34,500.00 | 115,000.00 |
| அம்பாறை | தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை | 22 | 23 | 18 | 3 | 9 | 10 | 9 | 41 | 61,500.00 | 205,000.00 |

EOG 03 - 0119

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.